# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:123:2016 நாள்: 22.03.2016

அன்பார்ந்த தோழர்களே,

## செயற்குழுக் கூட்டம்

நமது சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த மார்ச் 19ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுத்துறை வங்கிகள் இணைப்பு, வங்கிகளில் அதிகரித்துவரும் வாராக்கடன்கள், பாராளுமன்றத்தை நோக்கிய பேரணி, வரும் மே 25ஆம் நாள் நடைபெறவுள்ள வேலைநிறுத்தம், இடமாற்றல் கொள்கை, பதவி உயர்வுக் கொள்கை, பணி உயர்வுக் கொள்கை ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து விரிவாக விவாதித்து பல முடிவுகளை எடுத்துள்ளது.

சங்கம், ஊழியர் நலநிதி ஆகியவற்றின் 31.12.2015 வரையிலான கணக்குகள் அவையில் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டபின், ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 21வது மாநாட்டின் மலர் வெளியீட்டுக்குழுவின் கணக்குகளும் சமர்ப்பிக்கப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சமீபத்தில் நிர்வாகக்குழுவைச் சார்ந்த தோழர்.**A.சன்முகசுந்தரம்** அவர்களும், செயற்குழுவைச் சார்ந்த தோழியர்.**N.T.அனுஷா** அவர்களும் அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற்றதை கணக்கில் எடுத்துக்கொண்ட செயற்குழு, விரிவான விவாதத்திற்குப்பின், கீழ்க்கண்ட தோழர்களை நிர்வாகக்குழு, செயற்குழுவிற்கு ஒருமனதாக தேர்வு செய்தது :

துணைச்செயலாளர் : தோழர்.**B.ஜெயகுமார்**, மதுரை பிரதான கிளை

செயற்குழு உறுப்பினர் : தோழர்.**U.வெங்கட்ராமன்**, கோச்சடை கிளை, மதுரை

செயற்குழு உறுப்பினர் : தோழர்.**E.கிருஷ்ணமூர்த்தி**, அண்ணா சாலை, சென்னை

புதிதாக தேர்வு செய்யப்பட்ட தோழர்களுக்கு செயற்குழு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**